**Under Section 173 BNSS**

[signature] 24/8/24

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165155

1. District : விழுப்புரம் மாவட்டம் | PS: ஊ.த.த. பிரிவு காவல்நிலையம் | Year: 2024 ஆண்டு | FIR No.: 07 மு.த.அ. எண் | Date: 24.08.2024 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act - Sections பிரிவுகள்: 07 of PC ACT
   (ii) Act சட்டம்: 1988 As Amended Act. 2018 Sections பிரிவுகள்: 106 of BNSS
   (iii) Act சட்டம்: and 106 BNSS Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 23.8.2024 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.00 Time to : நேரம் வரை 22.00 மணிவரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.08.2024 Time நேரம் : 10.00
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் : 10.10

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 45 km வடமேற்கில்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி திண்டிவனம் இணை சார்பதிவாளர் எண்-1 அலுவலகம். திண்டிவனம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் இரா. சுமித்ரா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு. ரமேஷ், சார்பதிவாளர், திண்டிவனம் மாவட்ட பதிவாளர் அலுவலகம், திண்டிவனம் இணை சார்பதிவாளர் எண்-1 (பொறுப்பு) 2) டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் [illegible] ஆவண எழுத்தர்கள் 3) திரு. கேசவன் 4) திரு. காதிர் உசேன் 5) திரு. [illegible] 6) திரு. [illegible] புரோக்கர்கள் 7) திரு. ரமேஷ் 8) திரு. சந்திரன் மற்றும் தனிநபர்கள் திரு. அப்துல் மஜீத் மற்றும் திரு. ராஜா

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- யாதுமில்லை தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/08/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 24/8/24.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24.08.2024 / 12.10

Name: பெயர் : பி. செல்வி
Rank: நிலை .....................No. எண் .........

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை
விழுப்புரம்.

**பணிந்து அனுப்பப்படுகிறது.** அம்மையீர், நான் இன்று 24.08.2024-ம் தேதி காலை 10.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் துணை ஆய்வுக்குழு அலுவலர் இரா.சுமித்ரா என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இன்று 24.08.2024-ம் தேதி 10.10 மணிக்கு விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண் 07/2024/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம், அனுப்புநர், இரா.சுமித்ரா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம். ந.க.எண்.அ/380/2024, நாள் 23.08.2024.அய்யா, பொருள் திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - திண்டிவனம் இணை சார்பதிவாளர். எண்-1 அலுவலகம் - 23.08.2024 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் ஆய்வாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டது - புகார் அளித்தல் - தொடர்பாக:- பார்வை திடீர் ஆய்வு மகஜர் நாள்: 23.08.2024.இன்று 23.08.2024 ஆம் தேதி திருமதி. இரா.சுமித்ரா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் ஆகிய நான் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் இணை சார்பதிவாளர் எண்-1 அலுவலகத்தில் பத்திர பதிவுக்கு வரும் பொது மக்களிடம் ஆவண எழுத்தர்கள் மூலமும், புரோக்கர்கள் மூலமும் இலஞ்சம் பெறுவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் விழுப்புரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சென்று அங்கு பணியில் இருந்த செல்வி.ஈஸ்வரி, காவல் ஆய்வாளர், அவர்களிடம், திண்டிவனம் இணைசார்பதிவாளர் எண்.I சார்பதிவாளர் அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து அதன்படி நானும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினரும் உடனடியாக இரண்டு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 15.00 மணியளவில் திண்டிவனம் இணை சார்பதிவாளர் எண்.I அலுவலகத்தினுள் சென்று அங்கிருந்தவர்களிடமும் சார்பதிவாளர் அவர்களிடமும் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு பின்னர், அவர்கள் முன்னிலையில் எங்களை சுய பரிசோதனை செய்த பின்பு மேற்படி அலுவலகத்தில் உள்ளவர்களையும், அலுவலகத்தையும் சோதனை செய்தபோது, பின்னர் விசாரித்து தெரிந்த 1) திரு.ரமேஷ், கண்காணிப்பாளர், திண்டிவனம் மாவட்ட பதிவாளர் அலுவலகம், திண்டிவனம் இணை சார்பதிவாளர் எண்-1 (பொறுப்பு) அவர்கள் மேற்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். 2) டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திருமதி.கௌரி என்பவர் சார்பதிவாளர் மேஜைக்கு ஒட்டினாற்போல் இடது புறத்தில் மேற்கு பார்த்தவாறு அமர்ந்திருந்தார்.3)அலுவலக உதவியாளர் திரு.ராஜேந்திரன் என்பவர் சார்பதிவாளருக்கு அருகில் மேற்கு நோக்கியவாறு போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். 4)கேமரா ஆபரேட்டர் திருமதி.பிரவீணா என்பவர் சார்பதிவாளருக்கு எதிரில் வடமேற்கில் உள்ள கணினி அறையில் கிழக்கு நோக்கியவாறு போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார்.சார்பதிவாளர் இருக்கைக்கு நேர்எதிரே ஆவண எழுத்தர்கள்5) திரு.கேசவன் (உரிமம் எண்-B1276TVM/1991) த.பெ தம்புசாமி கவுண்டர், நெடுந்தெரு, எண்டியூர் கிராமம், திண்டிவனம் வட்டம் 6)திரு.ஜாகிர்உசேன்(உரிமம் எண்-B35TDM/2000) த.பெ சேக்அமின், 4-வது குறுக்கு தெரு, மரக்காணம் சாலை, அண்ணா நகர், திண்டிவனம் வட்டம்.

ஆவண எழுத்தர் திரு.ஜாகிர்உசேன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.510/-(200X2,50X1,20X3) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 8) ஆவண எழுத்தர் திரு.வேலன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.6,070/-(500X10,100X9,50X3.20X1) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 9) புரோக்கர் திரு.சந்திரன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.21,900/-(500X43,200X1,100X2) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 10) புரோக்கர் திரு.ரகுபதி என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.13,500/-(500X27) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 11) தனிநபர் திரு.அப்துல்மஜித் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.10,000/-(500X20) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 12) தனிநபர் திரு.ராஜா என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.50,000/(500X100) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 13) பின்பு திண்டிவனம் இணை சார் பதிவாளர் எண்-1 அலுவலகத்தின் வெளிப்புறத்தினை சோதனை செய்தபோது சார்பதிவாளருக்கு எதிரே வடமேற்கில் உள்ள கணினி அறையின் கதவருகே உள்ள ஜன்னலின் வெளிப்புறத்தில் ரூபாய்.1,00,000/-(500X200) கிடந்தது. மேற்படி தொகையை பற்றி திண்டிவனம் இணை சார் பதிவாளர் எண்-1 அலுவலகத்தில் இருந்தவர்களிடம் விசாரிக்க, மேற்படி பணத்திற்கு யாரும் உரிமை கோரவில்லை. எனவே, அந்த பணத்தை கணக்கில் வராத தொகையாக கருதி விசாரணைக்காக கைப்பற்றினேன். இந்த திடீராய்வின்போது திண்டிவனம் இணை சார் பதிவாளர் எண்-1 அலுவலகத்தின் உட்புறத்தினை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத தொகையான **ரூ.1,28,920/-** மற்றும் திண்டிவனம் இணை சார் பதிவாளர் எண்-1அலுவலகத்தின் வெளிப்புறத்தினை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத தொகையான **ரூ.1,00,000/-** என மொத்தம் **ரூ.2,28,920/-** (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபது ரூபாய் மட்டும்) ஆனது பத்திரப்பதிவுக்கு வரும் பொதுமக்களிடம் இருந்து இலஞ்சமாக பெற்றிருக்க கூடும் என விசாரணையில் தெரிய வருவதால் மேற்படி தொகையினை மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு அலுவலத்தில் இருந்த பதிவேடுகளான G கணக்குப் பதிவேடு, மற்றும் H கணக்குப் பதிவேடு, ஆகியவற்றை பார்வையிட்ட போது பதிவேடுகளில் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் பெறப்பட்டுள்ளது. ரொக்கமாக எந்த தொகையும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை. மேலும் விசாரணைக்காக திண்டிவனம் மாவட்ட பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு-2024, தனி நபர் ரொக்க பதிவேடு-2024, தற்காலிக பணியாளர் வருகை பதிவேடு-2024, மற்றும் இயக்கப்பதிவேடு-2024 ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பிறகு அலுவலகத்தில் இருந்த சார்பதிவாளர், அலுவலக பணியாளர்கள் மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

திண்டிவனம் இணை சார் பதிவாளர் எண்-1 அலுவலகத்தின் இருந்தவர்கள் அனைவரும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் பெண் காவலர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் நான் சொல்ல உதவி ஆய்வாளர் திரு.அ.சக்கரபாணி என்பவரால் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 23.08.2024-ம் தேதி சுமார் 15.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 23.08.2024-ம் தேதி 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட இலஞ்ச தொகை மற்றும் திண்டிவனம் இணை சார்பதிவாளர்-1 அலுவலகத்தில் கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத தொகைகள் மொத்தம் ரூபாய்.2,28,920/- (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபது மட்டும்) கைப்பற்றப்பட்டது சம்மந்தமாக நான் கொடுத்த புகாரின் பேரில் சம்மந்தப்பட்ட அலுவலர்களான 1) திரு.ரமேஷ், கண்காணிப்பாளர், திண்டிவனம் மாவட்ட பதிவாளர் அலுவலகம், திண்டிவனம் இணை சார்பதிவாளர் எண்-1 (பொறுப்பு), டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திருமதி.கௌரி, ஆவண எழுத்தர்கள் திரு.கேசவன், திரு.ஜாகிர்உசேன், திரு.ஜெயின்வுலாஅப்தின், திரு.வேலன், புரோக்கர்கள் திரு.ரகுபதி, திரு.சந்திரன் மற்றும் தனி நபர் திரு.அப்துல்மஜித் திரு.ராஜா ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள, sd (xxxxxx) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், கடலூர்.இணைப்பு:1.திடீர் ஆய்வு மகஜர் நாள். 23.08.2024.2.ரொக்கம் ரூபாய் 2,28,920/- .3.10நபர்களின் வாக்குமூலங்கள்.4.திண்டிவனம் மாவட்ட பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு-2024 5.திண்டிவனம் இணை சார்பதிவாளர்.1 ஒப்பந்த பணியாளர்கள் வருகைப்பதிவேடு-2024, 6. தனி நபர் ரொக்கஇருப்பு பதிவேடு-2024 மற்றும் இயக்கப்பதிவேடு-2024.

Madam,

Received the above computer typed complaint on 24.08.2024 at about 10.00 hrs. Hence, I registered a case in Viluppuram Vigilance and Anti-Corruption Cr.No.07/2024/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS at 10.10 hrs today on 24.08.2024 and took up for Investigation.sd xxxxxx on 24.08.2024 (N.Eswari) Inspector of Police, V&AC, VPM.

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Special Judge for cases under The Prevention of Corruption Act, Villupuram and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

(N.Eswari) 24/8/24.
Inspector of Police,
Vigilance and Anti-
Corruption, Villupuram.